**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண்.MCOP.No.13/2018 R.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | லாவண்யா |
| க/பெ. | வெங்கடேஷ் |
| வயது | 38 |
| வசிப்பிடம் | வேலூர் |
| தொழில் | உதவி மேலாளர் |

**முதல் விசாரணை 06.08.2025**

நான் இந்த வழக்கில் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் உதவி மேலாளர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எங்கள் நிறுவனத்தின் சார்பாக நியமிக்கப்பட்ட புலன் விசாரணை அலுவலரின் விபத்து பற்றிய அறிக்கை எ.ம.சா.ஆ.1.

**மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து குறித்த விவரங்கள் எனக்கு தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் தான் தெரியும். எங்கள் நிறுவனத்தின் புலன் விசாரணை அலுவலர் சம்பவ இடத்திற்கு சென்று தனிப்பட்ட முறையில் புலன் விசாரணை செய்யவில்லை என்றும், காவல் நிலைய ஆவணங்களை மட்டும் பரிசீலனை செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டள்ள வாகனத்தின் ஓட்டுனர் சம்பத்தன்று நிறுத்தக்கூடாத இடத்தில் நிறுத்தி போதுமான சமிக்ஞைகள் இன்றி நிறுத்தி வைத்து அவரும் விபத்திற்கு காரணம் என்று ம.சா.ஆ.1 அச்சு முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனமும் கூட்டாக இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் இறந்துவிட்டதால் அவர் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தேவைப்பட்டால் எங்களுடைய தனிநபர் புலன் விசாரணை அதிகாரியை விசாரிப்போம். தனிப்பட்ட முறையில் விபத்து யாருடைய தவறுதலால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. எங்களது காப்பீட்டாளர் எங்களிடம் எந்தவிதமான கோரிக்கை மனுவை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனம்தான் காரணம் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை